# பேராசிரியர் எம்.எஸ். சுவாமிநாதன் நூற்றாண்டு நினைவு அஞ்சலி நிகழ்வில் - முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினார்

செப்டம்பர் 27ம் தேதி, எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி அறக்கட்டளையில், பேராசிரியர் எம்.எஸ். சுவாமிநாதனின் நூற்றாண்டு கொண்டாட்ட நிகழ்வு நடைபெற்றது. இந்திய விவசாயத்தை மாற்றியமைத்த மற்றும் நிலையான வளர்ச்சிக்குத் தொடர்ந்து வழிகாட்டிய பேராசிரியர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களின் இந்த நிகழ்வில் முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் பங்கேற்று சிறப்புரை வழங்கினார்.

**முக்கிய நிகழ்வுகள்:**

மாண்புமிகு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் சிறப்பு உரை வழங்கினார். விவசாய மற்றும் விவசாயிகள் நல துறை மாண்புமிகு அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் கௌரவ விருந்தினராக கலந்து கொண்டார்.

வனத்துறை மற்றும் கைத்தறித் துறை மாண்புமிகு அமைச்சர் திரு. ஆர்.எஸ். ராஜகண்ணப்பன் தலைமை உரை வழங்கி, MSSRF-ன் ஆண்டு அறிக்கை, MSS100 மாநாட்டு அறிக்கை மற்றும் பேராசிரியர் எம்.எஸ். சுவாமிநாதனின் வாழ்க்கை மற்றும் சாதனைகள் குறித்த தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் வெளியீடான "வேலான் விஞ்ஞானி" நூல் ஆகியவற்றை வெளியிட்டார்.

தமிழ்நாடு அஞ்சல் வட்டத்தின் தலைமை இயக்குநர் திருமதி. மரியம்மா தாமஸ், MSS100 நினைவு தபால் அட்டைகளை வெளியிட்டு தமிழ்நாடு அஞ்சல் வட்டத்தின் சார்பில் உரையாற்றினார்.

தமிழக அரசின் கூடுதல் செயலாளர் திரு. ககன்தீப் சிங் பேடி, IAS அவர்கள் டெல்லியில் நடந்த எம்.எஸ். சுவாமிநாதன் சர்வதேச நூற்றாண்டு மாநாட்டில் பங்கேற்ற "60 விவசாயிகளின் வெற்றிக் கதைகள் அடங்கிய" அறிக்கையை வெளியிட்டார். மேலும் "மீன் அனைவருக்கும் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையத்தின் 15 ஆண்டுகள்" என்ற தாக்க அறிக்கையையும் தமிழில் வெளியிட்டார்.

மேலும் திருமதி. ஜெயஸ்ரீ முரளிதரன், IAS அவர்கள் MSSRF ஆதரவளிக்கும் NAFPCL, RESAPCOL மற்றும் Kolab FPCL ஆகிய மூன்று விவசாயிகள் உற்பத்தியாளர் நிறுவனங்களைக் கௌரவித்து MSSRF-ன் புதிய ஊட்டச்சத்து கல்வி தொடர்பான தமிழ் கையேட்டை வெளியிட்டார்.

திரு. என். ராம், தி இந்து குழுமத்தின் இயக்குநர் மற்றும் டாக்டர். நளினி கிருஷ்ணன், REACH நிர்வாக குழு உறுப்பினர் ஆகியோர் பேராசிரியர் எம்.எஸ். சுவாமிநாதனுக்கு அஞ்சலி நினைவுரையைப் பகிர்ந்துகொண்டனர் .

இறுதியாக MSSRF-ன் பல்லுயிர் இயக்குநர் டாக்டர். ஆலிவர் கிங் நன்றியுரை வழங்கினார். அதன் பின்னர் விக்னேஷ் ஈஸ்வர் மற்றும் குழுவினர் இசை நிகழ்ச்சி வழங்கினர்.

**நிகழ்ச்சியில் பங்கேற்றவர்கள் வழங்கிய உரையின் சுருக்கம்:**

"வேளாண் விஞ்ஞானி எம்.எஸ்.சுவாமிநாதன் பெயரை இந்தியா என்றும் மறக்காது. வரலாற்றில் ஒரு சிலர்தான் பல கோடி பேர் மீது தாக்கம் செலுத்தும் வகையில் வாழ்ந்துள்ளனர். எம்.எஸ்.சுவாமிநாதன் அத்தகையவர். மிக எளிமையான வாழ்வை வாழ்ந்தவர். பல முறை எம்.எஸ்.சுவாமிநாதனை சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. நாட்டில் பெரும்பாலான மக்கள் பட்டினியில் வாடிய போது, மக்களின் வயிறு நிறைய மாபெரும் புரட்சி செய்தவர் எம்.எஸ்.சுவாமிநாதன். உணவுப் பாதுகாப்பின் காவலராகவும், குரலற்றவர்களின் குரலாகவும் இருந்தவர். வறுமை ஒழிப்பைத் தனது குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டவர். இந்திய பசுமைப் புரட்சியின் தந்தை என உலகமே அவரை அழைத்தாலும், நமக்கு அவர் உணவுத் துறையைப் பாதுகாத்தவர். எம்.எஸ்.சுவாமிநாதனின் கடமைகளையும் கனவுகளையும் நிறைவேற்றும் வகையில் வேளாண் மாணவர்கள், விஞ்ஞானிகள் பாடுபட வேண்டும்." - மாண்புமிகு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின்

"இந்த நாட்டிற்காக உழைத்த மாபெரும் மனிதர். பசுமைப் புரட்சியால் உலகளாவிய தலைவராக மாறினார். அதிக மகசூல் தரும் அரிசி மற்றும் கோதுமை பயிர்களை அறிமுகப்படுத்தி இந்தியாவின் பசுமை சிற்பியாக விளங்கினார். இந்திய குடியரசின் மிகப்பெரிய விருதான பாரத ரத்னா பெற்றவர். அவரின் மகள் டாக்டர் சௌமியா சுவாமிநாதன் தற்போது இந்த நிறுவனத்தை நிர்வாகித்து வருவது மகிழ்ச்சியாக இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் நாட்டின் வளர்ச்சிக்காக பல முன்னோடி முயற்சிகள் எடுத்து வருகிறார். அவர் இந்த நிகழ்வில் பங்கேற்பதற்கான மிக முக்கியமான காரணம், நாட்டின் முன்னேற்றத்தில் மிக முக்கிய பங்கினை எம்.எஸ்.எஸ்.ஆர்.எஃப் நிறுவனம் வகித்து வருகிறது என்பதுதான்." - மாண்புமிகு வனத்துறை மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் திரு. ஆர்.எஸ். ராஜகண்ணப்பன்

"எம்.எஸ்.எஸ்.ஆர்.எஃப் மற்றும் தபால் துறை இணைந்து இந்த வரலாற்று சிறப்புமிக்க நூற்றாண்டு கொண்டாட்ட நிகழ்வினை நடத்தியுள்ளது. தபால் துறை என்பது இந்தியாவின் கடைக்கோடி கிராமங்கள் உட்பட அனைவருக்கும்

அனைத்து சேவைகளும் கிடைக்கும் வகையில் செயல்பட்டு வருகிறது. தமிழக அரசாங்கத்துடன் இணைந்து பல்வேறு அரசு நலத்திட்டங்களை அனைவரையும் சென்றடையும் வகையில் செயல்படுத்தி வருகிறோம். எம்.எஸ்.எஸ்.ஆர்.எஃப் உடன் இணைந்து ஆறு தபால் அட்டைகளை நூற்றாண்டு கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக வெளியிட்டுள்ளோம். அதில் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களின் புகைப்படம் பொறித்த விதைகளைக் கொண்ட தபால் அட்டை வெளியிடப்பட்டுள்ளது. இதுதான் முதல் விதைகள் கொண்ட தபால் அட்டையாகும்." - திருமதி. மரியம்மா தாமஸ்

இன்று நாம் எம் எஸ் எஸ் அவர்களின் நூற்றாண்டு கொண்டாட்ட நிகழ்வில் உள்ளோம். எம் எஸ் எஸ் அவர்கள் என்றவுடன் மூன்று விஷயம் எனக்கு நினைவுக்கு வருகிறது. ஒன்று அவர் வேளாண் ஆராய்ச்சி மற்றும் மரபணு பயிர்களை உருவாக்கியவர். இரண்டாவது அவர் ஆளுமையுள்ள நிர்வகிப்பவர் பல்வேறு நிறுவனத் தலைமையில் தலைமை தாங்கியுள்ளார். மூன்றாவது மனிதாபிமானம் கொண்ட நபர். எம் எஸ் எஸ் ஆர் எஃப் மற்றும் தமிழ்நாடு அரசாங்கம் இணைந்து விவசாயிகளுக்காக பல்வேறு நுண்ணுயிர்ச்சிகளை எடுத்துள்ளனர் தற்போதும் அது தொடர்கிறது. இயற்கை சீற்றங்கள் போது சதுப்பு நிலக்காடுகள் கடலோர கிராமங்களை பாதுகாத்துள்ளது. உதாரணமாக சுனாமி வந்தபோது பிச்சாவரத்தில் சுனாமியால் பெரிய அளவில் பாதிப்பு ஏற்படவில்லை. பிறகு நான் மாவட்ட ஆட்சியராக இருக்கும்போது எம் எஸ் சாரத்துடன் இணை சிகப்பு நில காடுகளை விரிவு படுத்துவதற்கான பணியை இணைந்து மேற்கொண்டேன் என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். எம் எஸ் எஸ் அவர்கள் இந்த மாநிலத்திற்கு மட்டுமல்ல உலகத்திற்கே தனது பங்கினை செலுத்தி உள்ளார் என்பது குறிப்பிடுகிறது. - திரு. ககன்தீப் சிங் பேடி, ஐ.ஏ.எஸ்

சிறுவயதிலிருந்தே எம் எஸ் அவர்கள் மீது பெரிய மரியாதை உள்ளது. சிறுவயதில் எனக்கு அவரைத் தெரியும் ஏனென்றால் அப்போது இந்தியாவில் பஞ்சம் இருந்தது அதற்கு விடையாக எம் எஸ் சுவாமிநாதன் அவர்கள் பசுமை புரட்சி மூலம் நம் நாட்டிற்கு மட்டுமல்லாமல் உலகத்திற்கே பல்வேறு விஷயங்களை கொடுத்தார். அவரால் தமிழ்நாட்டிற்கு மிகப்பெரிய பெருமை சேர்த்துள்ளார். இன்று நாம் பல பெயரை ஹீரோவாக கொண்டாடுகிறோம் ஆனால் உண்மையான ஹீரோ எம்எஸ் சுவாமிநாதன் அவர்கள் தான். - திருமதி ஜெயஸ்ரீ முரளிதரன், ஐ.ஏ.எஸ்

"டாக்டர் சுவாமிநாதனிடம் 'அவர்களின் 100வது பிறந்தநாளில் நான் இருப்பேன்' என்று வாக்குறுதி அளித்த தமிழ்நாடு முதலமைச்சர் இன்று அந்த வாக்குறுதியை நிறைவேற்றியுள்ளார்." - திரு. என். ராம்

"இந்தியாவின் பசுமைப் புரட்சியை உருவாக்குவதிலும் செயல்படுத்துவதிலும், பேராசிரியர் எம்.எஸ். சுவாமிநாதன் ஒரு சர்ச்சையற்ற அறிவியல் தலைவராகவும் உந்து சக்தியாகவும் இருந்தார். அதில் அவர் அற்புதமாக வெற்றி பெற்றார்." - திரு. என். ராம்

"பேராசிரியர் எம்.எஸ். சுவாமிநாதன் சர்வதேச ஒத்துழைப்பிலும், ஒற்றுமையிலும் உண்மையான நம்பிக்கை கொண்டிருந்தார் - அதுதான் அவரை அந்த சிறந்த மனிதராக உருவாக்கியது." - திரு. என். ராம்

"பேராசிரியர் சுவாமிநாதனைப் பற்றி, அறிவியல் மனிதராக பல்வேறு தரப்பட்ட மக்களின் நலனுக்காகவும், அனைத்து தரப்பு மக்களையும் சென்றடையும் வகையில் ஆக்கபூர்வமான அறிவியலை முன்னெடுத்துள்ளார்." - திரு. என். ராம்

"பேராசிரியர் எம்.எஸ். சுவாமிநாதன், அறிவியலால் இந்த சமூகத்தை எப்படி கட்டியெழுப்ப முடியும் என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு. ஒரு ஆராய்ச்சி என்பது அதன் முடிவுகளும் பலன்களும் மக்களைச் சென்றடைந்து பயனடையும்போதுதான் அந்த ஆராய்ச்சி அர்த்தமுள்ளதாக இருக்கும்." - டாக்டர். நளினி கிருஷ்ணன்